(ஒன்பதாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 1(11).]

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2022 ஒக்தோபர் 21 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2022 நவம்பர் 08, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2979/2022

கௌரவ குணதிலக ராஜபக்ஷ,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சிறுநீரக நோயாளர்களின் குருதி சுத்திகரிப்புக்காக மாத்தளை, வில்கமுவவில் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட வைத்தியசாலையின் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

(ii) மேற்படி நிர்மாணப் பணிகளில் இன்றளவில் நிறைவு செய்யப்பட்டுள்ள அளவு யாதென்பதையும்;

(iii) மேற்படி பிரதேசத்தை அண்மித்த பகுதிகளில் குருதி சுத்திகரிப்பினை மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ள சுமார் 2000 இற்கும் அதிகமான சிறுநீரக நோயாளிகள் இருப்பதை அறிவாரா என்பதையும்;

(iv) இந்நோயாளிகள் சிகிச்சைகளைப் பெறுவதற்கு அதிக செலவினை மேற்கொண்டு வேறு வைத்தியசாலைகளுக்குச் செல்ல வேண்டியுள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(v) மேற்படி வைத்தியசாலையின் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு, அது திறக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3084/2022

கௌரவ திஸகுட்டி ஆரச்சி,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தென் கொரியாவில் தொழில் புரிகின்ற இலங்கையர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்களுக்கு 05 ஆண்டுகளுக்காக வழங்கப்பட்டுள்ள வீசாக் காலம் முடிவடைவதையடுத்து, மேற்படி வீசாக் காலம் மீள நீடிக்கப்படுமா என்பதையும்;

(iii) இவர்களினால் இலங்கைக்கு வருடாந்தம் அனுப்பப்படுகின்ற அந்நியச் செலாவணி எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3115/2022

கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) கடதாசி மற்றும் அச்சு நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்ற வர்ணப்பூச்சு வகைகளை இறக்குமதி செய்வதற்கு வருடாந்தம் செலவிடப்படும் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகின்ற மொத்த கடதாசி மற்றும் அச்சு நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்ற மொத்த வர்ணப்பூச்சு வகைகளில் அரச துறையினால் பயன்படுத்தப்படுகின்ற அளவு யாது என்பதையும்;

(iii) மேற்படி பொருட்களை இறக்குமதி செய்வதற்காக செலவிடப்படுகின்ற அந்நியச் செலாவணியை சேமித்துக்கொள்வதற்கு முறையான வேலைத்திட்டம் தயாரிக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அரச துறையின் கடிதப் பரிமாற்றங்களின்போது நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதில் தடை ஏற்படுத்தும் சுற்றறிக்கைகள் மற்றும் ஒழுங்குவிதிகள் இருப்பின், அவற்றை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3155/2022

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இயங்கும் தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் தொழிற்பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி தொழில்நுட்பக் கல்லூரி / தொழிற்பயிற்சி நிலையம் ஒவ்வொன்றும் அமைக்கப்பட்டுள்ள இடங்கள் தனித்தனியாக யாவை என்பதையும்;

(iii) அத்தகைய தொழில்நுட்பக் கல்லூரிகள் / தொழிற்பயிற்சி நிலையங்களில் கடமையாற்றும் கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் தொழில் சந்தையை இலக்குவைத்து மேற்படி நிறுவனங்களால் நடத்தப்படுகின்ற பயிற்சிப் பாடநெறிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) 2015ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் தொழில் நிமித்தம் ஆற்றுப்படுத்தப்பட்டுள்ள பயிற்சிபெற்றவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) மேற்படி பாடநெறிகள் இற்றைப்படுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3166/2022

கௌரவ டப்ளியூ.எச்.எம்.தர்மசேன,— துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை விஸ்தரிக்கும் கருத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்திற்கு நிதி வசதிகளை வழங்க இணங்கியிருந்த சர்வதேச நிதி நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்;

(iii) தற்போது மேற்படி கருத்திட்டத்தின் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்தை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3170/2022

கௌரவ மயந்த திசாநாயக்க,— வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் அமைந்துள்ள வன ஒதுக்கங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவை அமைந்துள்ள பிரதேசங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வன ஒதுக்கங்கள் அனுமதியின்றி வெட்டி துப்பரவு செய்யப்படுகின்றன என்பதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(ii) ஆமெனில், இன்றளவில் அனுமதியின்றி வெட்டி துப்பரவு செய்யப்படுட்டுள்ள வன ஒதுக்கங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) வன ஒதுக்கங்களை அனுமதியின்றி வெட்டி துப்பரவு செய்தவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3207/2022

கௌரவ மிலான் ஜயதிலக்க,— மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள சமுர்த்தி பயனாளிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவர்களுள் சமூக வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்டத்திற்கு உள்வாங்கப்பட்டுள்ள பயனாளிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) சமுர்த்தி அபிவிருத்தி நிதியத்திலுள்ள பணம் முதலீடு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாறு முதலீடு செய்யப்பட்டுள்ள நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி முதலீடுகளுக்காக கிடைக்கப்பெற்ற அனுகூலங்கள் சதவீத அடிப்படையில் எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3217/2022

கௌரவ சுதத் மஞ்சுல,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கத்தின் பொதுப் பணிகளுக்காக பயன்படுத்துவதற்கென நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போதும் அப்பணிகள் நிறைவு செய்யப்படாத கட்டடங்கள் இலங்கையில் இருப்பதனை அறிவாரா என்பதையும்;

(ii) அக்கட்டடங்கள் தொடர்பான விபரங்கள் திரட்டப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) அக்கட்டடங்களுக்கான நிர்மாணப்பணிகளை நிறைவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3232/2022

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த அரசாங்கத்தினால் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் உள்ளூராட்சி மன்றங்களுக்கு அமய அடிப்படையில் அதிகளவான தொழிலாளர்கள் ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்டனர் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தொழிலாளர்களில் இன்றளவில் சேவையாற்றிக் கொண்டிருக்கும் தொழிலாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அத்தொழிலாளர்கள் இதுவரை சேவையில் நிரந்தரமாக்கப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) அவர்கள் சேவையில் நிரந்தரமாக்கப்படும் திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3261/2022

கௌரவ மர்ஜான் பளீல்,— நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பேருவளை தொடக்கம் ஹிக்கடுவை வரையிலான கரையோரப்பகுதி வேகமாக கடலரிப்புக்கு உள்ளாகி வருகின்றது என்பதையும்;

(ii) அதன் காரணமாக கடற்றொழிலாளர்கள் பாரிய நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கரையோரப் பகுதியை பாதுகாப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) அதற்காக நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி பாதுகாப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

ஒதுக்கீடுச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பெருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 செப்டெம்பர் 16 ஆம் திகதிய 2297/79 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.10.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பெருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 செப்டெம்பர் 23 ஆம் திகதிய 2298/55 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.10.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

## 2022 நவம்பர் 09, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

6/2022

கௌரவ கயந்த கருணாதிலக்க,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மசகு எண்ணெய் இல்லாததன் காரணமாக 2021ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தின் பின்னர் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினுடைய சப்புகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையத்தின் உற்பத்திப் பணிகள் நிறுத்தப்பட்ட சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) உலக சந்தையில் மசகு எண்ணெய் தட்டுப்பாடு நிலவாத சந்தர்ப்பத்தில் மசகு எண்ணெய்க்குப் பதிலாக சுத்திகரிக்கப்பட்ட எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்தமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) மசகு எண்ணெய்க்குப் பதிலாக சுத்திகரிக்கப்பட்ட எரிபொருளை இறக்குமதி செய்ததன் மூலம் கூட்டுத்தாபனம் இலாபம் ஈட்டியுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அந்த இலாபம் எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

32/2022

கௌரவ புத்திக பத்திறண,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போதைய பொருளாதார சூழ்நிலை காரணமாக தனியார் துறை நிதி நிறுவனங்கள் பாரிய நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளன என்பதையும்;

(ii) இதன் காரணமாக தனியார் துறை நிதி நிறுவனங்கள் கடனிறுக்க வகையின்மைக்கு உள்ளாகக்கூடும் என்பதையும்;

(iii) இத்தகையதொரு சூழ்நிலையில், குறிப்பிட்ட நிறுவனங்களுக்கான வைப்பாளர்களின் பணத்திற்கு பாதுகாப்பற்ற நிலை ஏற்படலாம் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) தனியார் துறை நிதி நிறுவனங்களுக்கான வைப்பாளர்களின் பணத்தின் பாதுகாப்பிற்கு அரசாங்கம் பொறுப்பேற்க முடியுமா;

(ii) ஆமெனில், அது எவ்வாறு;

(iii) தனியார் துறை நிதி நிறுவனமொன்றை தீர்த்துக் கட்டுவதெனில், குறிப்பிட்ட நிறுவனத்திற்கான வைப்பாளர்களின் பணம் மீள் செலுத்தப்படும் முறையியல் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

299/2022

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார,— வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மினிப்பே பிரதேச செயலகப் பிரிவுக்கும், உடுதும்பர பிரதேச செயலகப் பிரிவின் பிட்டிகொட, தேவஹந்திய மற்றும் தம்பகஹபிட்டிய போன்ற பிரதேசங்களுக்கும், மெததும்பர பிரதேச செயலகப் பிரிவுக்கும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள காட்டு யானைகளின் அச்சுறுத்தல் காரணமாக அப்பிரதேசங்களில் வசித்துவரும் மக்களுக்கும் இவர்களது விவசாய நடவடிக்கைகளுக்கும் பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பதையும்;

(ii) வன விலங்குகளால் ஏற்படுத்தப்படுகின்ற பயிர்ச் சேதம், கண்டி மாவட்டத்தில் முக்கியமான ஒரு பிரச்சினையாக காணப்படுகின்றது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பிரதேசங்களில் நிலவும் காட்டு யானைகளின் அச்சுறுத்தல்களைத் தடுப்பதற்காக இன்றளவில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) காட்டு யானைகளால் ஏற்படுத்தப்படுகின்ற சேதங்கள் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு இழப்பீடு வழங்க முறையான ஒரு வேலைத்திட்டம் உள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அதன் கீழ் ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள நிவாரணங்கள் யாவை என்பதையும்;

(iv) வன விலங்குகளால் ஏற்படுத்தப்படும் சேதங்கள் காரணமாக கண்டி மாவட்ட மக்கள் பிரதேசத்திற்கே உரிய பயிர்ச்செய்கையிலிருந்து விலகியுள்ளதை அறிவாரா என்பதையும்;

(v) அவ்வாறாயின், அந்த நிலைமையைத் தவிர்த்துக் கொள்வதற்காக எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

346/2022

கௌரவ ஹேஷா விதானகே,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை பெற்றோலிய தனியார் பவுசர் உரிமையாளர்கள் சங்கத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு உறுப்பினர்களினதும் பெயர், முகவரி மற்றும் இவர்களுக்குச் சொந்தமான பவுசர் வாகனத்தின் இலக்கம் என்பவை தனித்தனியாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) எரிபொருள் விலையேற்றத்திற்கு அமைவாக போக்குவரத்துக் கட்டணங்கள் திருத்தப்படாமையால் மேற்படி சங்கத்தின் உறுப்பினர்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றார்கள் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

679/2022

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொலன்னறுவை மாவட்டத்தின் திம்புலாகலை கல்வி வலயத்தில் தம்மின்ன மகா வித்தியாலயம் என்ற பெயரில் ஒரு பாடசாலை இருப்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் பணிபுரியும் ஆசிரியர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி பாடசாலையின் வகுப்பறைகள் மழை நாட்களில் நனைகின்றதென்பதை அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி பாடசாலையை அபிவிருத்தி செய்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்?

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

968/2022

கௌரவ சாணக்கியன் இராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பிரதேச செயலகத்துக்கென கணக்காளரொருவர் நியமிக்கப்பட்டுள்ளாரா என்பதையும்;

(ii) மேற்படி பிரதேச செயலகத்துக்கு கணக்காளரொருவரை நியமிப்பதில் தாமதம் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்பற்று, களுவாஞ்சிக்குடி மற்றும் போரத்தீவுபற்று ஆகிய மூன்று பிரதேச செயலகப் பிரிவுகளினதும் சனத்தொகை அதிகமென்பதால் மேற்படி ஒவ்வொரு பிரிவையும் இரண்டு பிரிவுகளாகப் பிரிப்பதற்கு இன்றளவில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) இது தொடர்பாக மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1110/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "நல்லாட்சி அரசாங்கம்" ஆட்சியிலிருந்த காலப்பகுதியில் மிலேனியம் செலென்ஜ் கோபரேஷன் (MCC) ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவிருந்தது என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) அவ்வொப்பந்தத்தின் மூலம் இலங்கைக்கு கிடைக்கவிருந்த அனுகூலங்கள் யாவை என்பதையும்;

(iii) அவ்வொப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இலங்கை சார்பில் முன்னின்று செயற்பட்ட அரசியல்வாதிகளின் பெயர்கள் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர்களின் பெயர்கள் என்பன தனித்தனியே யாவை என்பதையும்;

(iv) மேற்குறிப்பிட்ட ஒப்பந்தத்தை கைச்சாத்திடாமைக்கு ஏதுவாக அமைந்த காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3266/2022

கௌரவ திலிப் வெதஆராச்சி,— நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையில் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட சமுதாய நீர் வழங்கல் திட்டங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவற்றுள் இன்றளவில் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள திட்டங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட சமுதாய நீர் வழங்கல் திட்டங்களின் எண்ணிக்கை;

(ii) அவற்றுள் இன்றளவில் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ள மற்றும் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ள திட்டங்களின் எண்ணிக்கை;

ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுகளின் அடிப்படையில் எத்தனை என்பதை வெவ்வேறாக அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2022 நவம்பர் 11, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2536/2022

கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே,— மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் சிறுநீரக நிதியத்தில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டவிரோத செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு செயற்பாட்டின் விளைவாகவும் அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்து மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்களை அடையாளம் காண்பதற்கென புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பின், அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) அவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய இத்தகைய ஊழல் செயற்பாடுகளைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2555/2022

கௌரவ குமாரசிறி ரத்நாயக்க,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை, அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், மோசடி அல்லது சட்ட விரோதச் செயல் இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அவை வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு விடயம் காரணமாக அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்துகள் மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக யாது என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் தெரிவிக்கப்பட்டுள்ள செயல்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்களை இனங்காண விசாரணைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் இனங்காணப்பட்டிருப்பின், இவர்களுக்கு எதிராக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவில்லையெனின், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) எதிர்காலத்தில் இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(v) எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய இத்தகைய செயல்களைத் தடுப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2568/2022

கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் தேவையான திரிபோஷா தற்போது வழங்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) கப்புவத்த, ஜா - எலயில் அமைந்துள்ள திரிபோஷா தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றனவா என்பதையும்;

(iii) திரிபோஷா உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருட்கள் உள்நாட்டில் பெற்றுக்கொள்ளப்படுகின்றனவா என்பதையும்;

(iv) இன்றேல், இறக்குமதி செய்யப்படுகின்றனவா என்பதையும்;

(v) இறக்குமதி செய்யப்படுமாயின், 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை இறக்குமதி செய்யப்பட்டுள்ள மூலப்பொருட்களின் அளவு மற்றும் இதற்கென செலவிடப்பட்டுள்ள தொகை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2591/2022

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கிழக்குப் பிராந்தியத்தின், பிரதான பிராந்திய அலுவலகம் கல்முனைப் பிரதேசத்தில் உள்ள கட்டடமொன்றில் வாடகை அடிப்படையில் பேணிவரப்படுகின்றது என்பதையும்;

(ii) மேற்படி அலுவலகத்தை அமைப்பதற்கு மட்டக்களப்புப் பிரதேசத்தில் பொருத்தமான காணி ஒதுக்கப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டடம் எவ்வாண்டில் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டது என்பதையும்;

(ii) அதற்காக பின்பற்றப்பட்ட நடைமுறை யாதென்பதையும்;

(iii) கட்டடத்தின் மாதாந்த வாடகைத் தொகை மற்றும் அது வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து இற்றைவரை செலுத்தப்பட்டுள்ள மொத்த வாடகைத் தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி (அ) (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள காணி, மேற்படி விடயத்திற்கு எவ்வாண்டில் ஒதுக்கப்பட்டதென்பதையும்;

(ii) மேற்படி காணியில் உரிய கட்டடத்தை நிர்மாணிப்பதில் தாமதம் ஏற்படக் காரணமான விடயங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி கட்டடத்தை நிர்மாணித்தல் தொடர்பான எதிர்காலத் திட்டங்கள் யாவை என்பதையும்;

(iv) இவ்வலுவலகத்தை நிறுவும் போது, மட்டக்களப்பு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2605/2022

கௌரவ அஸோக அபேசிங்ஹ,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலனித்துவ ஆட்சியிலிருந்து சுதந்திரம் அடைந்ததன் பின்னர் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மறைப் பெறுமதியைப் பதிவுசெய்துள்ள வருடங்கள் யாவை;

(ii) மேற்படி ஒவ்வொரு வருடத்திற்குமான பொருளாதார வளர்ச்சி வெவ்வேறாக யாது;

(iii) அந்த ஒவ்வொரு வருடத்திலும் நிதி அமைச்சர் பதவியிலும் ஜனாதிபதி பதவியிலும் கடமையாற்றியுள்ள நபர்களின் பெயர்கள் வெவ்வேறாக யாவை;

(iv) மேற்படி வருடங்களில் இலங்கையின் பொருளாதாரத்தை வழமை நிலைக்குக் கொண்டுவருவதற்கு அப்போதைய அரசாங்கங்களினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2625/2022

கௌரவ டீ. வீரசிங்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது காணப்படும் பிரிவெனாக்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி பிரிவெனாக்களில் கல்வி பயிலும் சாதாரண மாணவர்கள் மற்றும் பிக்கு மாணவர்களின் எண்ணிக்கை தனித்தனியே எத்தனையென்பதையும்;

(iii) இப்பிரிவெனாக்களில் கடமையாற்றும் கல்விசார் பணியாட்டொகுதியையும் கல்விசாரா பணியாட்டொகுதியையும் சேர்ந்த ஊழியர்களின் எண்ணிக்கை தனித்தனியே எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்கூறப்பட்ட பிரிவெனாக்களில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக 2022 ஆண்டிற்கென ஒதுக்கப்பட்ட நிதித் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) புதிதாக பிரிவெனாக்களை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2633/2022

கௌரவ சம்பத் அதுகோரல,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிறு போகம் மற்றும் பெரும் போகத்திற்குத் தேவையான பசளையை எதிர்வரும் காலப்பகுதியில் இடையறாது வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) விதை நெல்லை தட்டுப்பாடின்றி வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) இன்றளவில் விதை நெல் பல்வேறு விலைகளில் விற்கப்படுகின்றது என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) விதை நெல்லின் விலையைக் கட்டுப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) களை நாசினிகளும் கிருமி நாசினிகளும் பல்வேறு விலைகளில் விற்பனை செய்யப்படுகின்றன என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) களை நாசினிகளினதும் கிருமி நாசினிகளினதும் விலைகளைக் கட்டுப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுமா என்பதையும்;

(iii) இவற்றை நிவாரண விலையில் வழங்குவதற்காக இன்றளவில் அரசாங்கம் இடையீடு செய்துள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2641/2022

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கைத்தொழிற்சாலைகள் மற்றும் வேறு நிர்மாணத் தளங்களிலிருந்து அதிகளவில் கழிவுகள் ஆறுகளில் இடப்படுகின்றன என்பதையும்;

(ii) சில நிர்மாணங்களுக்கு முறையான ஆய்வுகளின்றி சுற்றாடல் உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆறுகளில் கழிவுகளை இடுகின்ற கைத்தொழிற்சாலைகள்/ நிறுவனங்களை விழிப்புணர்வூட்டி அவ்வாறு கழிவுகள் இடப்படுவதனைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) ஆறுகளில் கழிவுகளை இடுகின்றதாக இன்றளவில் அடையாளங்காணப்பட்டுள்ள கைத்தொழிற்சாலைகள்/நிறுவனங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி கைத்தொழிற்சாலைகள்/ நிறுவனங்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2646/2022

கௌரவ காமினி வலேபோட,— வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சில தசாப்தங்களுக்கு முன்னர் இலங்கையில் மனித குடியிருப்புகளாகவும் பயிர்செய்கை நிலங்களாகவும் இருந்த நிலங்கள் பின்னர் ஒதுக்கப்பட்ட வனங்களாக பிரகடனப்படுத்தப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன என்பதையும்;

(ii) இதன் காரணமாக இப்பிரதேசங்களில் வாழ்ந்த மக்கள் இன்னலுக்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்;

(iii) இம்மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு வழிமுறையொன்று உருவாக்கப்பட வேண்டும் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பு காரணமாக இன்றளவில் பதிவாகியுள்ள பிரச்சினைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) எதிர்காலத்தில் இவ்வாறான பிரச்சினைகள் எற்படாமல் இருப்பதற்கு மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2887/2022

கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கற்பிட்டி குடாநாட்டில் மாதுளை பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படுவதனை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அங்கு மாதுளை பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலப் பரப்பு யாதென்பதையும்;

(iii) கற்பிட்டி குடாநாட்டில் மாதுளை பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) மேற்படி விவசாயிகளுக்கு தொழில்நுட்ப அறிவுரைகள் முறையாக கிடைக்கப்படாமை மற்றும் உற்பத்திகளை சந்தைப்படுத்துவது தொடர்பான தடைகள் உள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(v) அவற்றைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா.36/2022

கௌரவ நாலக பண்டார கோட்டேகொட,— பயிர்களை சேதப்படுத்துகின்ற மந்திகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தல்,— இலங்கையில் விவசாயப் பயிர்களுக்கு வன விலங்குகளினால் பெரும் சேதங்கள் ஏற்படுவதாலும், ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகத்தின் அறிக்கைகளின் பிரகாரம் விலங்குகளால் ஏற்படுகின்ற பயிர்ச் சேதமானது வருடாந்தம் சுமார் 40% அதாவது, 1800 கோடி ரூபாய்களை விட அதிகமென்பதாலும், அதிலும் மந்திகளினால் விவசாயப் பயிர்ச் செய்கைகளுக்கு ஏற்படும் சேதங்கள் படிப்படியாக அதிகரிக்கின்ற காரணத்தினால் எமது நாட்டின் விவசாயப் பெரு மக்களுக்கும் தேசிய பொருளாதாரத்துக்கும் நேரடி தாக்கம் ஏற்படுவதாலும், இலங்கை பௌத்த மற்றும் அகிம்சை நெறி கலாசாரத்துடன்கூடியதொரு நாடு என்ற வகையில் மந்திகளைக் கொல்வதன் மூலம் இப் பிரச்சினையைத் தீர்ப்பதை அனுமதிக்க முடியாது என்பதாலும், விஞ்ஞானபூர்வமான செயன்முறையொன்றின் மூலம் மந்திகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு உகந்த வேலைத்திட்டமொன்று அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.